09.02.2026

OS No: 540/2019

பி.வா.சா. 4 - சுப்பிரமணியன் த/பெ. ஒய்யப்பன்

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்திற்கும் எனது ஊருக்கும் இடையே 15 கி.மீ. தூரம் இருக்குமா என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும். 2 கி.மீ தூரம் என வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வளர்மதி எங்கு குடியிருக்கிறார் என்றால் பால்குளத்தில் குடியிருக்கிறார். பாண்டி எங்கு குடியிருக்கிறார் என்றால் காளையார்கோவில், செல்லபாண்டி எங்கு குடியிருக்கிறார் என்றால் அரியாகுறிச்சியில் குடியிருக்கிறார்கள். பாண்டியும் செல்லபாண்டியும் தற்போதும் மேற்படி ஊரில்தான் குடியிருக்கிறார்களா என்றால் மேற்படி ஊரில் தான் குடியிருக்கிறார்கள். தாவா வழக்கின் வாதிகள் எத்தனை பேர் என்றால் முத்துராமலிங்கம் வகையறா தாக்கல் செய்துள்ளார்கள் எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது. தாவா வழக்கு எந்த சர்வே எண் சொத்துக்களுக்கு போடப்பட்டுள்ள என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை எந்த வருடம் பாண்டி கிரையம் பெற்றார் என்றால் 2017ம் வருடம் வளர்மதியிடமிருந்து கிரையம் பெற்றார். எத்தனை செண்டு கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றால் 1 ஏக்கர் 60 செண்டு கிரையம் வாங்கப்பட்டது. மேற்படி கிரையச் சொத்திற்கான சர்வே எண்ணில் வளர்மதிக்கு எவ்வளவு பாத்தியம் என்றால் 3 ஏக்கர் பாத்தியம். தாவா சொத்து ரோடு ஒரத்தில் உள்ளதா என்றால் ரோடு ஒரத்தில் இல்லை. சற்று தள்ளி உள்ளது. என்னை யார் சாட்சியமளிக்க அழைத்து வந்தது என்றால் பாண்டி சொல்லி நான் வந்துள்ளேன். பாண்டியை எப்படி எனக்கு பழக்கம் என்றால் நாங்கள் இருவரும் ஒன்றாக தான் இருப்போம், ரொம்ப நாட்களாக பழக்கம், தாவா சொத்துகளை பிரதிவாதிகள் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றும், பாண்டி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவர் சொல்லி நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எத்தனை இலக்கச் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துகளை வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றும், பிரதிவாதிகள்

கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதிகள் அனுபவிக்கவில்லை என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2026.02.09 14:08:58 +0530